சக்ரவர்த்தினி.

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VII.	MADRAS, OCTOBER 1911.	NO. 3
தொகுதி எ.	சென்னை, அக்டோபர்ஸ் 1911.	பகுதி ௩

தற்கால ஸ்திரீபுருஷர்களின் நிலைமை.

—:[*]:—

தற்காலம் உலகத்தில் எங்குபார்த்தாலும் நாகரிகம் விருத்தியாய் வருகிறதென்பது நம்மெல்லோரு மறிந்தவிஷயமே. அந்த நாகரிகம் ஸ்திரி புருஷர்களிடத்து இகபர சாதகமாக அமைய வேண்டிய ஒழுக்கம், கல்வியபிவிருத்தி, உலகவிவகாரம் இவைகள் போன்றவைகளில் மேம்பாடுற வேண்டியதை யனுசரித்ததாகக் காணப்படினும் ஆராய்ந்து பார்க்கும்போது தற்கால நாகரிகம் பெரும்பாலும் ஸ்திரி புருஷர்களுக்குள் மிகுந்த டம்பத்தையே விருத்தியாக்குகிறதெனச் சொல்ல நேரிடும். எப்படியெனில், அன்னிய தேசத்தாருடைய நடை யுடை பாவனைகளைக் கையாடுவதே நாகரிகமெனக் கருதுபவர் பெரும்பான்மையோர். அப்படிக் கருதிநடப்பது முற்றும் பிசகாகாது. ஏனெனில் எந்த மதஸ்தராயினும் எந்த தேசத்தினராயினும் அவர்களிடமும் ஏதேனும் விசேஷமான நற்குண நற்செய்கைகள் பெறப்படுவது திண்ணமாதலால், அப்படி விசேஷித்துக் காணப்படுவனவற்றைக் கைப்பற்றுதல் ஒருகாலும் தவறாகாது. அதையொழித்து நம் தேயத்திற்கும் நமது ஆசாரவிவகாரங்களுக்கும் சிறிதும் ஒவ்வாதனவற்றைக்கொள்வது பெரும்பிழையும் தீங்குவிளைப்பனவு மாகுமென்பதில் ஐயுமுண்டோ? தங்கள் தேசவழக்கத்துக்கு ஒத்ததே உயர்ந்த

ஆசாரமன்றி வேறல்ல. பாருங்கள் நம் தேசத்தில் ஆடவர்களிற் சிலர் மேனாட்டு வழக்கமாகிய கால்சட்டை போடுதல் (Full dress) தொப்பியணிதல், எண்ணெய்க் குப்பதில் சோப்புத்தேய்த் துக்கொள்ளல், காப்பிகுடித்தல்முதலியவற்றைக் கைக்கொள்ளு கிறார்கள். மேனாட்டார் இப்படியுடுத்துவதும் சோப்புதேய்த்துக் கொளவதும் காப்பிகுடிப்பதும் அவர்களுடைய தேச சீதோஷ் ணத்தைப்பொருத்தேற்பட்டதென்பதை யிவர்கள் உணர்ந்தார் களில்லை. அவர்களுக்கு அப்படியிருப்பது சுகம். நம்மவருக்குஅத் தகைய வழக்கங்களால் சுகக்கேடென்றே தெரிந்தும் டம்பத் தினிமித்தமும் அதையே நாகரிகமென மயங்கிநிற்கும் பேதைப்புத் தியாலும் விடுகிறார்களில்லை. பாருங்கள் ஒருவன் நம்தேசத்தில் நாள்முழுதும் கால்சட்டை முதலியவைகளோடிருப் பதெனில் சிரமப்பட்டுத்தானாகவேண்டும். ஏனெனில் அவனுக்குப் புழுக்க மதிகரித்து எப்பொழுது அவைகளை கழற்றிவிட்டுக் காற்றாட விருப்போமென்கிற வரையிலாய்விடும். மாரிகாலமாயின் ஒரு வாறு ஒத்திருக்கும், அன்றியும் ஒருவன் நம்தேசத்தையொத்து இடையில் ஆடைபுனைந்து மேலே சட்டை தரித்துக்கொண்டு தலைப்பாகை யணிவதிலும் கால்சட்டை முதலிய (Full dress) போடுவதில் செலவு அதிகந்தானாகும். இதில் ஏழையாயிருப்பவ னுக்கு விருப்பம் ஏற்படுமாயின் அவன் தனக்கு அகப்படும் காசைத்துணிக்குத்தொலைத்துவிட்டுத்திண்டாடுகிறான்பாவம் இது இப்படியிருக்க சோப்பினாலோவெனில் செலவேயன்றி சுகக்கேடு மிகுதியும் ஏற்படுகிறது. பிறந்தது முதல் எண்ணெய் தேய்த்துக் கொள்வதை வழக்கமாகக்கொண்டவனுக்குக் சோப்புத்தேய்த் துக்கொள்வது எப்படிப்பொருந்தும்? ஆகவே அதனால் சுகக் குறைவையுமடைகிறார்கள். முன்னோர்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் வழக்கத்தைக்கொண்டது நம்தேச சீதோஷ்ணபாகு பாடு கருதியென்பதை இவர்கள் உணர்ந்தார்களில்லை. இவைக ளன்றிக் காபிகுடிக்கும் வழக்கம் ஏற்பட்டிருப்பதுபற்றி இப்பொ ழுது அநேக ஏழைக்குடும்பங்கள் வருந்துகின்றன. அதனால்சுகமி

ருப்பதாக ஒருவருந் தெரிவித்திலர். எந்த வைத்தியரும் கெடுதி யென்றே அபிப்பிராயப்படுகிறார்கள். ஒரு வீட்டில் ஒருவன் காப்பி ஒருவேளைகுடிப்பதனால் மாதம் இரண்டு ரூபாயில்லாமல் முடியாது. நாலைந்துபேரானால் சொல்லவேண்டுமா? அதுவும் அவ் வீட்டுக்குப் பொருளீட்டுவோன் ஒருவனாகவேயிருந்து அவன் சொற்பச் சம்பளமுடையவனாகவும் காபிகுடித்தலை நாகரிக மெனக்கருதினவனாகவு மிருந்திருப்பானாகில் அவன்பாடு எப்படி முடியுமென்பதை நீங்களே யோசியுங்கள்.

இவர்களிப்படியிருக்க, ஸ்திரீகளுக்கும் இந்தமயக்கம் தலைக் கேறி மஞ்சளையும் எண்ணெயையும் ஒழித்துச் சோப்பைத்தேய்த் துக் கொள்ளுதல், வெள்ளைப்பொடியை முகத்தில் தூவிக்கொள் ளுதல், ஆடைகளைப் பலவிதமாக அணிதல், தலைமயிரை ஒருவித மாக வாரி முடித்தல் முதலிய கோலங்களைக் கைபாடத் தலைப் பட்டுவிட்டார்கள். இதனால் வீட்டுத் தலைவன் படும்பாடு சொல்ல முடியாததாய் ஏற்பட்டிருக்கிறது. நம் தேசத்து ஸ்திரீகள் அபலைகளாக விருக்கிறார்கள். அவர்களை ஆடவர்கள் கேவலம் அடிமையாகவே நடத்துகிறார்கள். அவர்கள் விவகாரம் யாவும் அடுப்பங்கரையோடேயே முடிவாகிறது என்பனவாதிக்குறை நிவர்த்திக்கவும் அவர்களுக்கு உலகஞான முண்டாக்கவுங் கருதியே இப்பொழுது அங்கங்கே பள்ளிக்கூடங்களும், ஸ்திரீ ஸமாஜங்களும் ஏற்படுத்தப் படுகின்றன. அவைகளால் விளை வது மேற்குறித்த திண்டாட்டமான மயக்க நாகரிகமே தவிர வேறொன்றும் ஏற்படக்கண்டிலம். ஸ்திரீகள்பேரில் குற்றங்கூற எவ்வகையிலும் நியாயங்கிடையாது. ஆடவர்கள் சரியான நிலை மையை யடைந்து தங்கள் புத்தி தெளிவடைந்தாலன்றி நம்நாட் டில் ஸ்திரீகள் நல்ல நிலைமை யடைவதில்லை. ஆடவர்கள் பி ஏ எம் ஏ யென்று பாஸ்செய்தபோதிலும் அவர்கள் நாகரிகம் இன்னதென்பதை யுணர்ந்து அதற்குத் தக்கபடி நடக்கிறார்க ளில்லை.

இவைகளெல்லாவற்றையும் விட மேனாட்டாரிடங் காணாத ஒரு வழக்கம் இந்துக்களிடத்தில் வரவரமேலிட்டு வருகிறது. அதாவது, ஆடவன் பணத்தைக்கண்டதும் பவுன் வாங்குவதும் பலவகை நகைகளைஸ்திரீகள் விருப்பப்படி செய்து அவர்களுக்குக் காலோடு தலை பூட்டி அழகு பார்த்து டம்பம் பாராட்டுவது மாம். இது மேனாட்டாரிட மில்லாதது. இது எல்லாவற்றையும் விடப் பொல்லாததும் துன்பந் தருவதுமான வழக்கம், இதனால் ஸ்திரீகளுக்குள் பொறாமை, துரோகம் களவு, கொலை கர்வம் முதலிய தீயகுணங்கள் பெருகுகின்றன. காலக்கிரமத்தில் புருஷனைமதியாமலுமிருந்து விடுகிறார்கள். ஒரு ஸ்திரீயின்மேல் ஆயிரக்கணக்கான நகைபூட்டியிருப்பதையும் கண்டிருக்கிறோம். இதனால் பயன்யாதோ அறிகிலோம். அந்தப்பணத்தைவியாபார வழியிலோ விவசாயவழியிலோ வட்டிக்குக்கொடுத்தல் முதலியவற்றிலோ உபயோகிக்கின் லாபவருமன்றோ? இதை உணருகிறார்களில்லை. இதன்றியும் சேலைகளிலும் அதிகமான பணத்தைச் செலவழித்துக் கஷ்டத்துக் குள்ளாகிறார்கள்.

நேயர்களே! இதுவா நாகரீகம்? இப்படியிருந்தாலா முன்னுக்கு வரும் நமது தேசம்? புத்தி இகம் பரம் என்கிற இரண்டு வழியிலும் சென்றாலன்றோ தேசம் க்ஷேமமுறும். மேனாட்டாரிடம் இவ்விருவழியும் நன்கு அனுசரிக்கப்படுவதை இவர்கள் உணராமல் மயங்கி வெளித்தோற்றத்தில் மட்டும் ஆசைகொண்டு திரிவதேனோ? ஈசன் இம்மயக்கத்தை மாற்றித் திருவருள் புரிவாராக.

திட, ஜல, வாயுபதார்த்தங்கள்.

1. சுண்ணாம்புக்கல்லையும், தந்தத்தையும் நாமெல்லோரும் பார்த்திருக்கின்றோம். சுண்ணாம்புக்கல்லை நோக்கின் அதன்மேல்

சிறிய அணுக்களை நாம் பார்க்கின்றோம். பூதக்கண்ணாடியின் மூலமாய் நோக்கின் கணக்கற்ற அணுக்களை நாம் பார்க்கின்றோம். ஆகவே ஒவ்வொரு அணுவும் பார்க்கக்கூடாத அநேக சிறிய அணுக்களாலமைத்திருக்கின்றது. தந்தமோ அதிக வழவழப்பாய் யாதொரு முரடின்றி யிருக்கிறது. நமது கண்களுக்கு ஒரு அணுவும் புலப்படவில்லை. பூதக்கண்ணாடியின் மூலமாய் சிற்சில அணுக்களை நாம்பார்க்கின்றோம். ஆனால் இரண்டுபதார்த்தங்களையும் நாம் நமது கைகளில் வைத்துக்கொள்ளக்கூடும். சக்தியுதவியினாலன்றி நாம் அவைகளை உடைக்க முடியாது. உடைக்கும்பொழுது அவைகளினின்றும் அநேக துண்டுகள் தெளிக்கின்றன. ஆகவே சுண்ணாம்புக்கல், தந்தம், மரம், உலோகம் இவைகளைப்போன்ற பதார்த்தங்கள் சக்தியினாலன்றிப் பிறிக்கக்கூடாது. அநேக அணுக்களினால் அமைந்திருக்கின்றன. இவைகளைப்போன்ற பதார்த்தங்கள் திட பதார்த்தமென்று பெயர் பெறும்.

2. நாம் பருகும் தண்ணீர் திடபதார்த்தத்திலிருந்து மாறுதலை உடையதென்று இப்பொழுது சுலபமாக அறியலாம். தண்ணீரைக் கைகளில் வைத்திருக்க முடியாது. சுண்ணாம்புக்கல்லைப்போல் அதைக்கீழே பூமியின்மேல் வைத்தல் இயலாது. அப்பொழுது அது வைக்கப்பட்ட பாத்திரத்தினுருவத்தை அடையும். கூஜாவிலிருக்கின்ற நீர் கூஜாவின் வடிவத்தையும் ஏறியிலிருக்கின்ற நீர் பூமியின் வடிவத்தையு மடையும். மேலும் தண்ணீரிலுள்ள அணுக்கள்சுலபமாய் இடத்தைவிட்டு மாறுகின்றன. தண்ணீரைப்போன்ற பதார்த்தக்களுக்குத்தான் ஜலபதார்த்தமென்ற பெயர்.

3. கடைசியாக வாயுபதார்த்தத்தின் அணுக்கள் யாதொரு தடையுமின்றித் திரிகின்றன. ஆகவே அவைகள் வைக்கப்பட்ட பாத்திரமுழுமையும் பரவுகின்றன. காற்று வாயுபதார்த்தத்திற்குத் தக்க உதாரணம்.

4. பனிக்கட்டி திடபதார்த்த இனத்தினது. நாமதைச்சிறிது நேரம் கையில் வைத்துக்கொண்டிருப்பின் அது ஜல பதார்த்தமாகிய தண்ணீராகின்றது. அத்தண்ணீரைப் பாத்திரத்திலூற்றிக் காய்ச்சின் அது வாயுபதார்த்தமாகிய ஆவியாகின்றது. ஆகவே உஷ்ணத்தினால் திடபதார்த்தம் ஜலபதார்த்தமாகவும் ஜலபதார்த்தம் வாயுபதார்த்தமாகவும் மாறுமென்பது நன்கு விளங்குகிறது.

உஷ்ணத்திற்கு மாறாக் குளிர்ச்சியினால் வாயுபதார்த்தம் ஜலபதார்த்தமாகவும் ஜலபதார்த்தம் திடபதார்த்தமாகவும் மாறுமென்பது சொல்லாமலே விளங்கும். குளிர்ச்சியினால் நீராவி தண்ணீராகவும் தண்ணீர் பனிக்கட்டியாகவும் மாறும்.

5. ஆகவே மூவகைப் பதார்த்தங்களின் நிலைமைக்கு உஷ்ணமும் குளிர்ச்சியுமே காரணம். உஷ்ணமானது அணுக்களுக்கிடையிலுள்ள இடைவெளிகளை அதிகரிக்கின்றது. அப்பொழுது திடபதார்த்தம் மாறுதலடைகின்றது. குளிர்ச்சியானது அணுக்களுக் கிடையிலுள்ளது. இடைவெளிகளைக் குறைத்து வாயுபதார்த்தத்தை மாறச்செய்கிறது.

R. சங்கரன்.

ஸ்ரீராம ஜனனப்ரபாவம்

(தொடர்ச்சி.)

VII அனந்தரம் ஸ்ரீராமன் சேனைசைன்னியங்களுடன் பௌர்ணமி மத்தியானத்திற்குமேல் பிரயாணப்பட்டு அன்று சாயங்காலம் சமுத்திரைக் கரைவந்து சேர்ந்தது. அன்றிரவு ஸ்வாமியை வீபூஷணன் சாணகதி அடைந்தது. பிரதமை முதல் மூன்று நாள் வரையில் ஸ்வாமி தர்ப்பசயனம். த்ருதிகை வரை

யினும் சரி, திருதிகை முதல் ஐந்துநாள் வரையினும் ஸேது பந்தனம், அஷ்டமி வரையினும் சரி. அன்றிரவு ஸ்வாமி ஸ்வேத பர்வத மேறியது.

VIII நவமி மத்தியானத்திற்கு மேல் யுத்தாரம்பம், தொந்தயுத்தம், நாகபாசபந்தனம், கருடாகமனம், தூம்ராக்ஷன் அகம்பன், பிரகஸ்தன் வதம்.

IX 1. தசமி உதயாதி $3\frac{3}{4}$நாழிகைக்குள்ளாக இராவணன் அபஜெயப் பட்டது. அப்பால் $3\frac{3}{4}$நாழிகைக்குள்ளாக கும்பகர்ணனை எழுப்பியது. அப்பால் $2\frac{1}{2}$நாழிகைக்குள்ளாக கும்பகர்ணன் வதம். இதற்குமேல், 15நாழிகைக்குள்ளாக தேவாந்தக, நராந்தக, மகோதர, மகாபார்சுவ, அதிகாய, திரிசிர சு முதலானவர்களின் வதம்.

IX 2. மற்ற 6 நாழிகைக்குள்ளாக அறுபத்தேழு கோடி சேனைசைன்னியங்களையும் ஹதம் செய்தது. லக்ஷ்மணனை இந்திரஜிதது பிரமாஸ்திரத்தால் கட்டியது. அன்றிரவு $3\frac{3}{4}$நாழிகைக்குள்ளாக ஹனுமார் சஞ்சீவி பர்வதத்தைக் கொணர்ந்து பிரமாஸ்திர விமோசனமும் செய்தது.

X ஏகாதசியன்று சாயங்காலம் வரையில், கும்ப நிகும்ப, மகாராக்ஷ, யூபாக்ஷ, சுரோணிதாக்ஷாள் வதம். அன்றிரவு முதல் திரியோதசி வரையிலும் 3 நாள் இந்திரஜித்து யுத்தம். சதுர்த்தசி உதயாதி $3\frac{3}{4}$நாழிகைக்குள்ளாக மூலபலவதம். அப்பால் அன்று யுத்தமில்லை.

அமாவாசை யுதயாதி முதல் இராவணயுத்தம். அன்றிரவு 4ம் ஜாமத்தில் இராவணவதம்.

XI இதற்குமேல் தாதுவருஷம் சித்திரமாஸம் பிரதமை மண்டோதரி பிரலாபம். இராவண ஸம்ஸ்காரமும் செய்யப் பட்டது.

XII துதிகையில் விபீஷண பட்டாபிஷேகம் த்ருதிகையில், ஸீதாசோதனம் பிரமஸ் துதி.

சதுர்த்தியில் வானர சேனைசமுகங்களுக்கு வெகுமான மளிக்கப்பட்டது. பஞ்சமியில் சுவாமி ஸீதா லக்ஷ்மண ஸமேதனாய், புஷ்பாரோகணம் ஸேதுதரிசனம்.

சஷ்டியில், ஸ்வாமி அயோத்தியா பிரவேசம். அன்றிரவு நந்திக்கிராமப் பிரவேசம்.

ஸப்தமியில் ராமராஜ்ய பட்டாபிஷேகம்.

அஷ்டமியில் சுக்ரீவன் முதலானவானர வீரர்களுக்கும் விபூஷணன் முதலான ராக்ஷதவீரர்களுக்கும ஸ்வாமி விடை கொடுத்தது.

ராமஜனனப்பிரபாவம், ஸம்பூரணம்.

இரண்டு பாதைகள்.

வருஷப்பிறப்பு அன்று இராத்திரி ஓர் கிழவன் தன் வீட்டுப் பலகணியண்டை நின்று கொண்டிருந்தான். அசைவற்ற நீர் நிலையுள்ள ஓர் தடாகத்தின் கண் மலர்ந்திருக்கும் வெண்தாமரை புஷ்பங்கள்போல் ஙனீலமான ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருந்ததை நோக்கினான். பிறகு தன்னைக்காட்டிலும் நல்லஸ்திதியிலிருக்கும் மனிதர்களும் பெண்டிர்களும் இப்பூமண்டலத்தின் வழியாய்க் கடைசியில் நாம் யாவரும் அடையவேண்டிய கல்லறையை நோக்கிச்செல்வதைக் கண்டான்.

மானிடர் யாவரும் இவ்வாழ்நாள் முடிவிற்குள் அனுபவிக்கவேண்டியநிலைமைகளை அவன் கடந்தாயிற்று. உலகவாழ்க்கை

யின் வழியில் யாத்திரை செய்யுங்கால் பிழைகளையும், மனநோய்களையும் தவிரவேறெவற்றையும் அனுபவித்தவனல்லன் பலவீனத்தையடைந்தான். வியாகூலமும் விசனமும் அதிகரித்துக் கிழத்தன்மையில் சுகானுபவ நிலைகளெதுவுமில்லை.

இப்படியிருக்கையில் தன் இளமைப்பருவத்தில் நடந்தவைகளை ஞாபகத்திற்குக் கொண்டுவந்தான். தான் சிறுபயலாயிருக்கும்பொழுது தன் தகப்பன் தன்னை இரண்டு பாதைகளில் கொணர்ந்து விட்டதையும் அதில் ஒருபாதைபிரகாசமாயும்தென்றல் காற்றினால் குளிர்ந்தும் செழிப்பான நிலங்களால் மூடப்பட்டதாயும் தெய்வமோகினிகளின் பாட்டு கேட்கக்கூடியதாயும் மற்றொன்று இருண்டதாயும் அதன் கடையில் கஜ இருட்டால் சூழப்பட்டு விஷப் பூச்சிகள் பாம்புகள் இவைகள் வசித்துவருமிடமாயும் ஓர் குகைக்கு வழியாயிருந்ததையும் மனதில் எண்ணலாயினான்.

அவன் ஆகாயத்தை நோக்கி தவிர விசனத்துடன் "ஓ இளமைத்தன்மையே, திரும்பிவா ! ஓ என் தகப்பனே, மறுபடியும் என்னை இவ்வழிகளில் விடு. நான் நலமான வழியை நாடுகிறேன்," என்று கூவினான். ஆனால் அவன் தகப்பனும் இறந்துவிட்டான்; இவன் இளமைத்தன்மையும் போய்விட்டது.

சிறு விளக்குகள் தன் எதிரில் சதுப்பு நிலங்களின் வழியாய்ப் போவதையும் அடிக்கடி அவை மறைந்துபோவதையும் கண்டான். இவ்விளக்குள் தான் அவன் வாழ்நாளின் முதல் நாள். ஆகாயத்தினின்றும் ஓர் நக்ஷத்திரம் விழுந்து இருளில் மூழ்கிப் போவதைக் கண்டான்; இது அவன் வாழ்நாட்களின் பாவனை. பிரயோசனமற்ற விசனத்தால் அவன் மனம் அப்பால் குத்தப்பட்ட இருதயம்போல் தவித்தது. இப்படியிருக்கத்தன்னுடன் வாழ ஆரம்பித்த சிறுவர்கள், இன்று (வருஷப் பிறப்பன்றையதினம்) கண்ணியப்படுத்தப் படுவதையும், அவர்கள் சந்தோஷப்படுவதையும், நினைத்தான்.

கோவில் மணி கணீர் கணீர் என்று அடிக்க, தான் குழந்தையாயிருக்கும் பொழுது, தன் தாய்தந்தையர்கள், தான் நல்ல ஸ்திதியடைய வேண்டுமென அக்கோயிலில் பிரார்த்தித்தது அவன் மனதிற்கு வந்தது. துக்கக்கடலில் முழுகி அவன் தன் தாய் தந்தையர்கள் இப்பொழுது வசிக்கும் ஆகாயத்தை நோக்கச் சக்தியற்றவனாய், அழுதுகொண்டே தலை குனிந்து, "இளமைப் பருவமே திரும்பிவா! இளமைப் பருவமே திரும்பிவா!! திரும்பிவா!!!" என்று கூக்குரலிட்டான்.

அவனுக்கு இளமைப் பருவம் வந்தது; ஏனெனில் இவன் கண்ட காக்ஷிகளெல்லாம் வருஷப்பிறப்பன்றிரவு கண்ட கனவே; அவன் இளைஞனே, ஆனால் அவன் செய்த பிழைகளைத்தும் வாஸ்தவமே. சரிவரத் தர்மவழியில் நடக்க இன்னும் நாட்கள் இருக்கின்றன வென்பதையும், தான் இன்னும் அக்கொஜ இருட்டான கொடியகுகைக்குள் நுழையவில்லையென்றும் சந்தோஷித்து ஈஸ்வரனை நமஸ்கரித்தான்.

இளைஞர்களே! உங்களுள் இன்னும், எவ்வழியாய்ப் போவதென்று அறியாமல், வாழ்நாளின் யாத்திரை ஆரம்பிக்காதவர்கள் எவரேனு மிருப்பின், தர்மமற்ற வழியில் செல்பவர்கள், உதவியற்றும், சக்தியற்று மிருக்கும் கிழத்தன்மையில் வீணாக, "ஓ, இளமைப் பருவமே திரும்பிவா! ஓ, என்வாழ்நாளின் முன்பாகத்தைத் திரும்பவுமடைவேனாக!! ஓ, தெய்வமே!!! என்று கூவுவார்களென்பது திண்ணம்.

T. M. R.

குங்குலியக் கலய நாயனார் புராணம்.

உலகமானது நிலைபெறுதற்குக் காரணமாகிய நீர் வளத்தினைக்கொண்ட சோழ மண்டலத்திலே, "மழைப்பின் வாரா

உறுதிகளுளவோ" எனத் தெய்வப் புலவர்கள் கொண்டாடும் வண்ணம் உலையா முயற்சியால் ஊழின் வலியைச் சிந்தின மார்க்கண்டேய முனிவரிருந்த திருக்கடவூரிலே பிராமண குலத்திலே கலயர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவர், ஒன்பது ஒன்பதாக மூன்று ஒன்பதினைக் கொண்ட புரி நூலினை அணிந்த மார்புடனும், நீராடுங்கால் தோய்க்கப் பட்ட வஸ்திரம் உடம்பிலேகிடந்து புலரும்படி உடுத்த உடையுடனும் துதித்த வண்ணமாகத் தலைமேலே கூப்பிய கையுடனும், நாப்புடைபெயரும் அளவிலே பஞ்சாக்கரத்தை உச்சரித்து; நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவமுமாகிய மூன்றுவகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயாலுண்டாகிய செல்வத்தினையும், அறத்தினை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையும் உபநயனத்துக்கு முன்பு ஒரு பிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையு முடைய அவ்வந்தணர் மணமிக்க நறிய பூவை எடுத்து திருக்கடவூர் வீரட்டானத் துறையும் எம்பெருமானை வழிபடுங் காலமறிந்து வழிபாடு புரிந்து வருவார். இவர்,

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி
யரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளேவைத்து
விரும்பி நல் விலக்குத் தூபம் விதியினா லி – வல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல் வார் கடவூர்வீ ரட்டனாரே"

என்று நாவுக்கரையார் தேவாரம் இந்நிலவுலகில் நிலவுறும்படி குந்துருகம், கருப்பூரம் காரகில், வெண்சந்தனம், குங்குலியம் என்னும் ஐவகைத் தூபந் தம்முள் குங்குலியத் தூபத்தினைத் திருவீரட்டானத் தார்க்கு இட்டுவந்தனர். இட்டுவருங் காலத்துச் சர்வலோக நாயகனாகிய சிவபெருமான் அவ்வுறு தொழிலாளரது மெய்யன்பிற்கு உவந்து அம்மெய்யன்பை உலகத்தவர்க்குக்காட்டி அவர்கள் மனத்திலும் பத்தியாகிய நல்லவித்தினை நடும்படிகருதி அவர்க்கு வறுமை நோயினைத் தந்தனர். எல்லாரையும்

வருத்தும் வறுமையின் தன்மையை இவ்விடத்துச் சிறிது விசாரிப்போம்.

செல்வர் கடை நோக்கிச் சேறற்றுன்பமும், அவரைக் காண்டற்றுன்பமும், கண்டான் மறுத்துழி நிகழுந் துன்பமும், மறுவழியும் அவர் கொடுத்தது வாங்கற் றுன்பமும், அது கொடுவந்து நுகர்வன கூட்டற்றுன்பமும் ஆய இத்துன்பமெல்லாம் விளைதற்குக் காரணமாயிருக்கும் நல்குரவினைப் பற்றி இராத்தினக் கவிராயர் தமது புலவராற்றுப் படையில்.

"தொல்காப் பியமுத லொல்காப் பனுவலுள்
கருவி செய்கையென் றிருவகைத் தாய
எழுத்துச் சொற்பொரு ளியாப்பணி யெனத்துறை
பழுத்த விலக்கணப் பவ்வங் கடந்தும்
இலக்கிய மெனுங்கட லெளிதினிற் கடந்தும்
கலக்கும் வெங்கலிக் கடல் கடப்பரிதாகி
ஈகை யென்னு மிரும்புணை யேற்றி
ஓகைசேர் செல்வமென் றோர்பெருந் தீவினிற்
சேர்த்துயிர் காக்குந் தியாகி யென்றோர்
கீர்த்திபெறு மீகான் கிடைத்த லின்மையினால்
தொல்லையூழ் வினையாஞ் சுழிசுழித் தலைப்பச்
செல்லல்கூ ரவாவெனுந் திரையெடுத் தெறிய
வன்பசி யென்னு மகரமீன் விழுங்கத்
துன்பமென்னுஞ் சுறவெதிர் பாயக்
கவலை யென்னுங் கடுங்கரா மீர்ப்பத்
துவளுபு மேனி சேர்ந்து நடு நடுங்கியும்
அன்புள சிந்தைய ராகுநட் டோரெனும்
வன்பிலா வோட்டை வங்கத் தேறலும்
அப்புறத் தியங்கா தலை தலை மீதுறக்

குப்புறத் தாழ்ந்து கூட வமிழ்ந்தியும்
எவ்விழி யேனு மினிமுயன் றுய்துமென்
றவ்வழி யுளூற்று மருந்தொழிற் பாசிலைப்
பற்றெனப் பற்றிப் பட்ர்தலு னைந்துனைந்
தற்றிடை சிதைப்ப வலக்கணுற் றிரங்கியும்

ஆக்கமென்னு மக்கரை சேர்துமென்
றாக்கமி லிரவெனு மோர்பசு மட்குடம்
கைக்கொடு நீந்தக் கரைந்து கரைந் தேகலு
அக்குடம்போல் வகங்கை கரைந்து
நல்குர வென்னு நடுக்கான் புகுந்து

மல்குவெந்துயராம் வனத்தீ வளைப்பக்
கிளையெனுந் துளுநகாற் றளையெனச் சுற்ற
மாயா விரவெனும் வன்பேய் தொடர
ஈயா வன்கண ரெனுந்தேள் கொட்ட
நெடும்பசி யென்னும் கொடும்புலிக் கிரையாய்

மானமுங் குலமும் வண்மையும் பொறையும்
ஞானமுந் தருமமும் நன்மையுங் குடிபோய்க்
கருத்துறு பயமுங் கவ்வையும் பழியும்
வருத்தமும் பிணியும் வதியுமா லயமாய்ப்
படல்கொடு சாத்து மிடனிலா மனையும்

காய்ந்த புத்தோலை வேய்ந்திடாக் கூரையும்
பொருக்கறத் தெளித்துப் பெருக்கா முன்றிலும்
புரையறத் தீற்றிப் புதுக்காச் சுவருந்
தரையலான் மெத்தை தழுவாச் சேக்கையும்
மெழுகி மென்கோல மெழுதாத் திண்ணையும்

கழுநீர் களைந்து பொழியாத் தொட்டியும்
பொங்கா வடுப்பும் புகையா வட்டிலும்
அங்கார் பதம்வைத் தடுக்காக் குழிசியும்
அயன்மனை புகுதாச் செயன்மனை யாட்டி
மஞ்சணீ ராடி வயங்கா மேனியும்

அஞ்சனந் தீட்டா வயில்விழிக் கடையும்
செம்பஞ் செழுதா வம்புயப் பாதமும்
வரிவளை புனையா விருகைக் காந்தளும்
திலகம் பொறியாத் திங்கள் வாணுதலும்
இலகுவெண் டுகில்பொரு திடுநூலிடையும்

மைம்முகிற் காருடன வகிர்ந்துசிக் கறுத்து
மொய்ம்மலர் சொருகி முடியாக் கூந்தலும்
நயனிலா நடையு நகையிலா முகமும்
பயனிலா மொழியும் பரிவிலா வுளமும்
பாலொடு வறத்துப் பசியொடு வெதுப்பிச்

சுவைத்தது மொருபாற் சுவைத்துளி பெறாது
நெடிதுயிர்த் தயர்ந்து துடிதுடித் தேங்கி
நோய்முக நோக்கிய தாய்முக நோக்கி
சுரித முண்க ணீர்கரைந் தொழுக
ஊரல்வெள் ளெயிற்றின் முளைநிலா வொழுக

மழலையந் தொனிவிடுத் தழுமிளங் குரலும்
முற்பட முதிர்ந்த பொற்புடைச் சிறாஅர்
ஒருபொழு தாயினும் ஊன்சுவை கூறு
திருபொழு தேமாந் திணைக்கவு ளதைப்ப
எண்ணெய் காணாது தண்முடி காய

மிளகு காணா தொளிமுக மழுங்க
நரம்பெழுந் தென்பு நிரப்பமெய் தோன்ற
எக்கிய வயிறு விலைபோற் குழைய

நக்கிய கடைவாய் நாவொடு பிசக்குறக்
கழிங்கெனப் பசிய கண்களுட் குழியப்
பழந்துணிக் கந்தை பறந்திடை நால
ஆயே யாயே யீயாய் கூழென
முகிற்றலைப் பருவ முழக்கெழுந் தேரையிற்
றுகிற்றலை பற்றித் தொடர்ந்தழு தாற்றும்
காண்டொறுங் காண்டொறுங் கவலுறு சிந்தையன்
ஈண்டினி யென்செய்தூஉ மென்செய்தூஉ மென்ன"

மனமாழ்கிய தாகக் கூறியுள்ளனர். வரும்,

சோமசுந்தரம்.

சென்னை மருத்துவ ஆஸ்பத்திரி.

இந்துக்கள் தமது ஸ்திரீகளுக்கு அத்தியாவசியகமாக வேண்டிய விஷயங்களைப் பற்றிக் கவனித்து நடக்கின்றார்களில்லை யென்று நாம் பன்முறை எழுதியிருக்கின்றோம். அவற்றுள், பெருங்குறையாவது அவர்கள் ஸ்திரீகளின் பிரசவ காலத்தில் அவர்களை ஆநாதரவு செய்வதேயாம்; அக்காலத்தில் நாம் அவர்களைக் கிரமமாகப் பாது காப்பதில்லை; அசுசியும், கல்வியின்மையும், மடமையும் நிறைந்துள்ள மருத்துவச்சிகளைக் கொண்டு அவர்கட்கு மருத்துவம் பார்க்கின்றோம். அதனாற் பல துர் மரணங்கள் நேரிடுகின்றன. அங்ஙனம் நேரிடுவதை நம்மவர்கள் கண் கூடாகக் கண்டும் அவ்விஷயத்தைத் திருத்துவதற்குரிய முயற்சி செய்யாது வாளாவிருக்கின்றனர். நம்மவர்கள் பொருளையே பெருஞ்சாதனமாக வெண்ணி அதனையே பேணிப் பாது காக்கின்றனரன்றி இகபரசுகங்கட் கேதுவாக விருக்கும் தமது

ஸ்திரீகளின் குறைகளைக் கவனித்து நடக்க முன் வருகின்றார்களில்லை; ஆனால் விஷயசுகத்தை விரும்பித் தமது ஸ்திரீகளோடு கூடிக் குலாவி ஆடுமாடுகளைப் போன்று பிள்ளைகளைப் பெறப் பிரயத்தனஞ் செய்கின்றார்களே யொழிய, பிரசவகாலத்தில் தக்க மருத்துவச்சிகளைக் கொண்டு மருத்துவம் பார்க்க முயல்கின்றாரில்லை யென்பது மிகு பிரசித்தமாம். யுனைடெட்கிங்டத்திலுள்ள மருத்துவ ஆஸ்பத்திரியில் நூற்றிற்கு ஒன்று வீதமேனும் பிரசவிப்பவர்களுள் மரணம் நேரிடுவதில்லை யென்பதன் காரணங்களை யாராயந் தறிவார்களாயின், இவ்விஷயத்தில் நமது தேசத்தார் தக்க ஏற்பாடு செய்வார்கள். பிரசவகாலத்தில் மேனாட்டில் துர்மரணங்கள் நேரிடாமைக்குக் காரணம் தக்க மருத்துவச்சிகளும் தாதிமார்களும் இருப்பதேயாம். அவ்வாறு மருத்துவ வேலையில் பயிற்சிபெற்ற மருத்துவச்சிகளும் தாதிகளும் நமது தேசத்திலில்லாமையால் பிரசவத்தில் நேரிடும் துர்மரணங்கள் தினந்தோறும் அதிகரித்து வருகின்றன; நூற்றிற்கு 40 அல்லது 50 வீதம் துர்மரணங்கள் நமது தேசத்தில் சம்பவிக்கின்றன வென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறுயசம்பவங்களை நமது தேசத்தார் கண்டிருந்தும் நமது பெண்மணிகளைக் காப்பாற்ற முன்னுக்கு வருகின்றார்களில்லை. இப்போது சென்னைக் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் கவலையுற்று நான்கு லட்சம் ரூபாய் நன்கொடை யளித்திருக்கின்றனர்; இந்த ரூபாய்களுள், இரண்டு லட்சம் ரூபாய், பிரான்புட்பேரால் பிரசவத்திற்கு வேண்டிய புதுக்கட்டடங்கள் கட்டுவதற்கும், மற்ற இரண்டு லட்ச ரூபாய் மருத்துவ தாதிவேலைகளைப் பயிற்சி செய்விப்பதற்கு வேண்டிய கல்விச்சாலை கர்னல் கிப்பார்டுபேரால் கட்டுவதற்கும் விநியோகிக்கப்படும். சென்னைக் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்திற் செய்தவுதவி பெரிதுங் கொண்டாடத் தக்கவிடம். சென்ற $5\frac{1}{2}$ வருடகாலமாகக் கவர்னராகவிருந்தசர் ஆர்தர் லாலிமுதலியவர்கள் இவ்விஷயத்திற்செய்தவுபகாரம்எஞ்ஞான்றும் மறக்கத்தக்க தன்றாம். கவர்ன்மெண்டார் கொடுத்தநன்கொடை

யைக்கொண்டு ஷை ஆஸ்பத்திரியை விசாலப்படுத்த ஏற்பாடாயிருக்கும் புதுக்கட்டடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்ட சர் ஆர்தர் லாலியும் லெடிலாலியும் சென்றிருந்தார்கள். இப்போது, மேற்படி ஆஸ்பத்திரியின் புராதன நிலைமையைப் பற்றியும் கர்னல் பிரான்புட்டவர்களால் ஆஸ்பத்திரிமுன்னுக்கு வந்ததைப் பற்றியும், தற்காலம் அது தென்னிந்தியருக்குப் பேருபகாரமாக விருப்பதைப் பற்றியும், மருத்துவத் தொழில் கற்பிக்கத் தக்க ஏற்பாடுகளில்லாமையைப் பற்றியும் விரிவாக விளக்கிக் காட்டினூர். பிறகு, சர் ஆர் தர் லாலி புதுக்கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல்லை நாட்டித் தாம் சென்னை ராஜதானிக்குக் கவர்னராக விருந்த $5\frac{1}{2}$ வருடகாலத்தில் ஆஸ்பத்திரியின் ஒழுங்குகளையும் சீர் திருத்தங்களையும் நன்ருகக் கவனித்து அவற்றிற்குரிய வேற்பாடுகளைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக விருந்தோமென்று சொன்னூர்.

பிறகு, தாதிகட்காகக் கட்டப்படும் "லேடி லாலி நர்சிங் ஹோம்" என்னும் புதுக்கட்டடத்திற்கு லேடி லாலி அஸ்திவாரக் கல்லை நாட்டினர். இதில் தாதிகட்கு மருத்துவம் கற்பிக்கும் ஏற்பாடு செய்யப்படும். அங்குத் தாதிகளெல்லாம் கூடி லேடி லாலியை மத்தியிற்கொண்டு ஒரு பொட்டகிறுப் பெடுத்தார்கள்.

ஷை விஷயத்திற்காக 10000 ரூபாய் ஒரு ஜமீன்தார் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றனர். அத்தொகையைக் கர்னல் கிப்பார்டு தக்கவாறு உபயோகப்படுத்துமாறு முத்தரவளிக்கப்பட்டிருக்கின்றனர். பீட்டாபூர் ராணியார் அவர்களும் பெருந்தொகைக்கொரு செக்கனுப்பி இருக்கின்றனர். இத்தொகையைக் கொண்டு ஒரு சீனை மெட்டோகிருப் மேற்படி கிப்பார்டு ஸ்கூலிற்குத் தருவிக்கப் போகின்றனர். நமது ஸ்திரீகளின் சௌக்கியத்தின் பொருட்டுக் கர்னல் கிப்பார்டு செய்துவரும் பரோபகாரம் நம்மவர்களால் எக்காலத்தும் மறக்கத்தக்க தன்ரும். அன்னிய தேச ஜாதியா ரொருவருக்கு நமது ஸ்திரீகளின்-

மீதிருக்கும் அபிமானம் நமது தேசத்தாருக்குச் சிறிது மில்லா திருப்பது மிகவும் வியசனிக்கத் தக்கதேயாம். நமது தேசத்தார் களுள் பலர் பொருளுள்ளவர்களாக விருந்தும், அவர்கள் பொரு ளாலாம் பயனை யனுபவியாது அதனைத் புதைத்து வைத்துத் தாமுமனுபவியாது பிறர்க்குங்கொடாது வாளாவைத்திருப்பது என்னோ? பொருள் உயிர்போங்காலத்து உற்றதுணையாவதில்லை யென்பதை யுணர்ந்து, அதனை நமது தேசத்தார் தக்கவாறாக உபயோகப் படுத்துதல் அத்தியாவசியகமாம். தாழ்ந்த நிலை மையிலிருக்கும் நமது ஸ்திரீகளின் உபகாரத்தின் பொருட்டுப் பொருளைச் செலவிடுவதைப் பார்க்கினும் பெரிய பரோபகாரம் வேறொன்று மின்றாம். இங்ஙனஞ் செய்வது புண்ணியமும் புகழுமாம். இதனை நமது தேசத்தார் கவனித்து மேற்படி ஆஸ் பத்திரி விஷயத்தில் செய்ப வேண்டியன வற்றைச் செய்தற் பொருட்டு வேண்டிய பொருளைக் கொடுத்துதவுவது மேலான பரோபகாரமாம்.

லோ—ரி.

பாற்கடலில் பள்ளிகொண்ட இரகசியம்.

"ஆதிசேஷன் என்னும் ஒரு பெரிய பாம்பு பாற்கடலில் மிதந்து கொண்டிருந்தது. அந்தச் சர்ப்பத்தைச் சயனமாகக் கொண்டு ஸ்ரீ நாராயணன் ஒரு மனுவந்திரத்திற்கு அதில் நித் திரை புரிந்தார். அப்படி அவர்சேஷசயனத்தில் நித்திரைபுரிந்து கொண்டிருந்தபோது உலகம் முழுவதும் அவருடைய உந்திக் கமலத்தில் அடங்கியிருந்தது. அவ்விதமாக அநேக காலம் ஸ்ரீ நாராயணன் நித்திரை புரிந்தார். புதுமனுவந்தரம் உண்டான தும் ஸ்ரீ நாராயணன்கண்விழித்துக்கொண்டார். அப்படி விழித் துக்கொண்டபோது அவருடைய உந்தியிலிருந்து ஒரு தாமரைப் புஷ்பம் உண்டாயிற்று. அத்தாமரை மலர்ந்தவுடன் அதற்

குள்ளிருந்து நான்கு சிரங்களையுடைய பிரமதேவன் வெளிவந்தார். அந்தப் பிர்மா இந்தப் பிரபஞ்சங்களைச் சிருஷ்டித்தார்." என்று பண்டைக்காலபுராணங்கள் கூறுகின்றன

இந்தப் புராணவரலாற்றை ஒருவன் ஆழ்ந்துபடிப்பானானால் இதில் ஏதோ அந்தரங்க அர்த்தம் பொதிந்திருக்கிறதென்பதை அறியாமற்போகான். புராணங்களில் கூறப்படும் ஒரு சில வரலாறு பொய்யாக இருப்பினும் இருக்கலாம். அது கொண்டே எல்லாவற்றையும் பொய்யானதென்றும், நம்பத்தகுந்ததல்லவென்றும் ஒதுக்கிவிடுதல் கூடாது. மேற்சொன்ன புராணவரலாறு அந்தரங்க அர்த்தங்கொண்ட தத்துவ விஷயங்களை விளக்க எழுந்ததென்பதிற் சிறிதும் ஐயமில்லை. இவ்வுலகத்தின் தோற்ற ஒடுக்கத்தை விளக்குதற் பொருட்டே இவ்வரலாறு எழுந்ததாம் என்க. தத்துவவிஷயங்களை விளக்கமாகச் சொல்லாமல் நம்முடைய ஆன்றோர்கள் அவைகளைக் கதைகளிலும் உவமானங்களிலும் அமைத்துக் கூறக் காரணமென்ன? அவ்விதம் செய்வதால் விஷயங்கள் எளிதில் புலப்படாமல் நாம் இடர்ப்படவேண்டியிருக்கின்றதே? என்று சிலர்வினவலாம். இதற்குப்பலர் பலவிதமான சமாதானம் சொல்லுகிறார்கள். "பக்குவிகளுக்குத்தான் இந்த விஷயங்களெல்லாம் தெரியவேண்டும். மற்றவர்களுக்குத் தெரிந்தால் பாவம்வந்து சேரும். ஆதலாற்றான் மறை பொருளாக நமது ஆன்றோர்கள் கூறினார்கள்" என்று சிலர் சமாதானம் சொல்லுகிறார்கள் "சாதாரணமாக உண்மையை விளக்குவதைவிட ஆச்சரியம் விளைவிக்கும்படி ஒரு கற்பனையில் அமைத்துச் சொன்னால் ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதியும். இதை உத்தேசித்துத் தான் நமது ஆன்றோர்கள் மறை பொருளாக உண்மையை வெளியிட்டிருக்கின்றார்கள்." என்று வேறு சிலர் சமாதானம் கூறுகின்றார்கள். இவர்கள் கூறும் சமாதானம் அவ்வளவு திருப்தியைக்கொடுக்கக் கூடியதாயில்லை. சமாதானம் எவ்வாறாயினும் ஆகுக. பூர்வீக ஆசாரியர்கள் ஏற்படுத்திய கற்பனைகளில் உண்மை உண்டு என்பது மட்டும் தேற்றம். பல நூறு

வருடங்களுக்கு முன்னிருந்த அரிஸ்டாடில் என்னும் தத்துவ சாஸ்திரியாரே தம்முடைய காலத்தில் கிரீஸ் தேசத்தில் நடை பெற்ற கற்பனைகளை ஆழ்ந்து யோசித்து அவைகளாற் பெறப் படும் உண்மையைக்கண்டு பிடிக்க முயன்றாரென்றால் வேறென்ன சொல்லவேண்டும். லார்டு பேக்கன் தாம் எழுதிய "பூர்வீகர் களின் ஞானம்" என்னும் புத்தகத்தில் தம்முடைய அறிவிற்கு எட்டியமட்டும் பூர்வீகர்களுடைய கற்பனையை ஆராய்ந்து அதன் உண்மையை எழுதியிருத்தலும் எம்முடைய கூற்றைவலி யுறுத் தும். இவ்வரிய நூலை எழுதிய சேக்கனைப் பற்றி புரொபஸர் சேஸ் பின் வருமாறு கூறுகின்றார். "பேக்கன் கற்பனைகளில் அடங்கிய ஆழ்ந்த கருத்துகளை யெல்லாம் அநேகமாய்க் கண்டு பிடித்துவிட்டார் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இந்த கற் பனைகளெல்லாம் பழைய காலத்து சாதுக்களால் அலங்காரம் மூலமாகவும், உவமானம் மூலமாகவும் வெளியிடப்பட்டு உண் மைப்பொருள்களைத் தம் கண் அடக்கிக்கொண்டிருப்பனவாம்." இதைச் சாமானியர்கள் சொல்லியிருக்கிறதே உண்மையெனக் கொண்டுவிட்டார்கள்."

இனி நாம் எடுத்துக்கொண்ட புராண வரலாற்றிலுள்ள உண்மையைச் சிறிதுவிளக்குவாம். ஆதிசேஷன் மிதந்து கொண் டிருப்பதாகச் சொல்லப்படும் பாற்கடல் சுத்தமாயை என்னும் சடவஸ்துவைக் குறிக்கிறது. சுத்தமாயை உயிரற்ற சடப் பொருள். ஆனால் மிகப் பரிசுத்தமாயும் சுழல் சுழலாகத் தானே இயங்கக் கூடிய சக்தியை இயற்கையிலேயே உடையதாயு மிருக்கும். இதை ஆங்கில நூலார் சுத்தமான மாட்டர் என்று கூறுவார்கள். உலக சிருஷ்டிக்கு இந்தசுத்தமாயை ஒரு முக்கியமான காரணம். உலக சிருஷ்டியின் நிமித்தம் இறை வனோடு அபின்னமான பராசக்தி சுத்தமாயை என்னும் சடப்பொருளைக் கலக்கும். அங்ஙனம் கலக்குவதால் சுழல் சுழலான இயக்கம் ஒன்று உண்டாகும். இந்த இயக்கத்தின் வேகத்தினால் அணுவினும் அணுவாய்க்கண்ணுக்குப்புலப்படாமல்

இருக்கும் அசுத்தமாயையில் சுழற்சியுண்டாகும். இச்சுழற்சியால் கண்ணுக்குப் புலப்படாத அணுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கண்ணுக்குப் புலப்படும் இத்தூலப் பிரபஞ்சமாகும். இதைத் தான் பிரகிருது மாயை என்று சொல்வது. அசுத்த மாயையென்றதும் சுத்த மாயைப்போல் உள்ள சடப்பொருள் தான். ஆனல் சுத்தமாயைப்போல அவ்வளவு பரிசுத்தமாயிராது. சுத்தமாயை அசுத்தமாயை விட அதிக சூக்குமமானது. அசுத்த மாயை பிரகிருதி மாயையை விடசூட்சுமமானது. ஆகவே பாற்கடல் சுத்தமாயையைக் குறிக்கிறதென்பது பெறப்பட்டது. சுத்தமாயையும் பராசக்தியும் ஒன்ருெடொன்று கலப்பதினல் உண்டாகும் இபக்கத்தைக் குறிக்கவே ஆதிசேஷன் என்னும் பாம்பு உவமிக்கப்பட்டிருக்கிறது. ஆதிசேஷன் மீது படுத்திருக்கும் ஸ்ரீநாராயணனது திருவுருவம் எதைக் குறிப்பிடுகிறதென்ருல் சுத்தமாயையின் இயக்கத்தினல் உண்டாகும் பிரகிருதி மாயையைக் குறிப்பிடுகிறது. ஆகவே பாற்கடல் சுத்தமாயையையும் ஆதிசேஷன் சுத்தமாயையும் பராசக்தியும் கலப்பதால் உண்டாகும் சுழற்சியான இயக்கத்தையும் நாராயணன் இச் சுழற்சியின் பயனுல் உண்டாகும் பிரகிருது மாயையையும் குறிக்கின்றனர் என்பது பெறப்பட்டது. நாராயணன் தூங்குவது எதைக் குறிக்கின்றது? இங்கு நாராயணன் என்று சொன்னது அவனுடைய சரீரத்தையல்ல. ஆனல் அவனுடைய ஆன்மாவை. இந்த ஆன்மா உலகத்தை இயக்கும்போது நாராயணன் விழித்துக்கொண்டிருக்கின்ருன் என்றும் உலகத்தை இச்சக்தி இயக்கா திருக்கும்போது தூங்குகிருனென்றும் கொள்ளலே முறையாகும். ஒரு மனுவந்திரம் வரையில் இடைவிடாது பிறப்பிறப்புகளிற் கிடந்துழன்று களைத்துப் போயிருக்கும் ஜீவான்மாக்களுக்கு ஆறுதல் தரவேண்டி ஒவ்வொரு மன் வந்திரம் முடிவிலும் இறைவன் இந்தப் பிரபஞ்சத்தை சம்ஹரித்துப் பிரகிருது வரையிலும் கொண்டுபோய்த் தமது உந்திக்கமலத்தில் அடக்கிக் கொள்ளுகிருர். அதாவது கட்புலனுன பிரபஞ்சம் மீண்டும் பிரிந்து கண்ணுக்குப் புலப்படாத அணுத்தன்மையையடைதல்.

இந்த கலையைத் தான் நாராயணன் உந்திக்கமலத்தில் உலகத்தை அடக்கி வைத்திருக்கிறார் என்று சொன்னது.

பிரபஞ்சத்தை அணு அணுவாகப் பிரித்துவிடும் இந்தச் செயல் பிரகிருதிக்குமேற் போகாமல் பிரகிருதியுடன் நின்று விடும் பட்சத்தில் அதை விஷ்ணு பிரளயம் என்று சொல்லுவார்கள். இச்செயலை நடத்தும் ஆன்மாவை விஷ்ணு அல்லது நாராயணன் என்று சொல்லுவார்கள். இச்செயல் அசுத்த மாயை வரையிற் செல்லுமானால் அதை ருத்ர பிரளயமென்றும் அது வரை செல்லும் இதே ஆன்மாவை ருத்திரன் என்றும் சொல்வார்கள். இச்செயல் சுத்தமாயை வரையிற் செல்லுமானால் அதைச் சதாசிவபிரளயமென்றும் அது வரை செல்லும இதே ஆன்மாவை சதாசிவம் என்றும் கூறுவார்கள். இதனால் சதா சிவன் ருத்திரன் விஷ்ணு என்று மூன்று கடவுள்கள் தனித் தனியில்லையென்றும் ஒரே பரமான்மாவே அவ்வச் சமயங்களுக்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றதென்றும் புலப்படவில்லையா?

இனி நாராயணன் விழித்துக் கொள்ளுகிறார் என்பதனால் பெறப்படுவதென்னே? பிரளயகாலத்தில் சங்காரஞ் செய்யப் பட்டு ஒடுங்கிப் போயிருக்கும் சூக்குமப் பிரபஞ்சத்தை மறுபடியும் கட்புலனான ஸ்தூலப்பிரபஞ்சமாக இறைவன் செய்யும் சிருஷ்டியைக் குறிப்பதாகும். நாராயணன் விழித்துக்கொண்டான் என்பது நாராயனன் உந்திக்கமலம் பிரகிருதியிலிருந்து பிரபஞ்சம் உண்டாகும். அந்த அவசரத்தைப்புலப்படுத்துகிறது. உந்திக்கமலத்திலிருந்து தோன்றும் தாமரை முகை இந்தப் பிரபஞ்சத்திற்கு முக்கிய காரணமான குண தத்துவத்தைக் குறிப்பிடுகின்றது. தாமரை மலர்கிறதென்றது குணதத்துவத்திலிருந்து பிரிகின்ற ராசதம், தாமதம், சத்துவம் என்னும் முக்குணங்களைக் குறிப்பிடுகிறது. தாமரை மலரில் பிர்மா தோன்றினரென்றது குண தத்துவத்திற்குக் கீழ்ப்பட்ட மற்ற தத்துவங்களை நடத்துவிக்

கின்ற இறைவனின் வேலையைக் குறிக்கின்றது. இன்னும் இவை போன்ற பல ரகசியார்த்தங்கள் இதன் கண் அடங்கியிருக்கின்றன.

கோவலன்.

சீதாபதி.

(தொடர்ச்சி)

அத்தியாயம் 2.

இரவு பத்தரைமணியிருக்கும். வளர்பிறை நாளானதால் நிலவு பாடுசாயும் சமயம். தெருவில்ஜனங்களுடைய நடமாட்டம் அநேகமாக அடங்கிப்போய் விட்டது. இரண்டொரு வீட்டுத் திண்ணையில் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சில சோடா வெற்றிலைப்பாக்குக் கடைகளும்மிட்டாய்க்கடைகளுமே திறக்கப்; பட்டிருக்கின்றன. ஜட்காவண்டிகளில் இரண்டொன்று இங்கும் அங்கும் போய்க்கொண்டிருக்கின்றன. இச்சமயம் பார்த்து சென்னை திருவல்லிக்கேணி பைக்ராப்ட்ரோட்டிலுள்ள ஓர் வீட்டு மேன்மாடியிலிருந்து வாலிபனொருவன் கீழே யிறங்கித் தெருவில் வந்து நின்று இங்கும் அங்கும் பார்த்துவிட்டுத் தான் அப்பொழுது அணிந்து கொண்டிருந்த ஷர்ட்டையும் மேல் அங்கவஸ்திரத்தையும் நோக்கினான். உடனே "சட்! இதென்ன இது கிழிந்திருக்கின்றது இந்த ஷர்ட்" என்று நினைத் மட மட வென மச்சுப்படி மீதேறி அறையைத் திறந்து அங்கு அன்று வண்ணான் கொண்டுவந்து வைத்திருந்த வேறொரு ஷர்ட்டை எடுத்து யணிந்துகொண்டு முன்போலவே கதவைத் தாளிட்டுக் கொண்டு வேகு வேகமாக இறங்கிக் கீழே வந்து மேற்கு முகம் நோக்கிக் கொஞ்சதூரம் நடந்துவந்தான். அங்கே மிட்டாய்க் கடைகள் இரண்டுதிறந்து வைக்கப்பட்டிப்பதைக் கண்டு "இந்த மிட்டாயில்கொஞ்சம்வாங்கிக்கொண்டுபோய்க் கொடுப்போம்—"

என நினைத்து தன் சட்டைப்பையில் கைபோட்டான். சட்டைப் பையில் ஒன்றுங் காணாதிருக்க, "செய்! நாமெடுத்துவைத்தஐந்து ரூபாய் நோட்டெங்கே; ஓகோ! பெட்டியினருகில் வைத்து விட்டேனே" என நினைத்து மீண்டும் வேகமாக நடந்து இரண்டு நிமிஷத்திலே தன்னிருப்பிடம் வந்து கதவைத்திறந்து விளக்குப் பொருத்தி சுற்று மற்றும் பார்க்க அங்கே பெட்டியனருகே கிடந்த ஐந்து ரூபாய் நோட்டையெடுத்துக் கொண்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு மாடியிலிருந்து இறங்கி முன் போல் பைக் ராப்ட்ரோட்டில் மேற்கு முகமாக நடந்தான். நடந்து சுமார் இருபதடி தூரம் வந்ததும் ஒருவன் எதிர்ப்பட்டான். இவன் ஆள் கட்டைக்குட்டையாக எமனும் நடுங்கத்தக்க பயங்கர ரூப முடையவனாயிருக்கிறான். ஆனால் உடுத்துக் கொண்டிருக்கும் உடையை நோக்கினாலோ ஒருபெரிய பிரபுவைப்போல் தோன்று கிறது. நடப்பதோ ஒரு அறையடிக்கு ஒருகாலாக முன் வைத்த கால் பெயர்த்து வேறிடத்தில் வைப்பதும் வைக்காததுமாய்க் காலை மாறிமாறி வைத்து நடக்கிறான். இவன் சற்றுமுன் ரூமி லிருந்து நோட்டெடுத்துக் கொண்டு வெளிப்புறப்பட்டவனைக் கிட்டியதும் "என்ன இவ்வளவு தாமதம்? இப்பொழுது மணி பதினொன்றாகப் போகிறதே; பத்தரைக்கே தயாராயிருக் கும்படி தெரிவித்தேனே. மறந்துவிட்டாப் போலிருக்கிறது" என்று கேட்டான். "இல்லை; முந்தியே புறப்பட்டு பாதி வழி வந்தேன். கடையில் மிட்டாய் வாங்க நினைத்து ரூபாய்க்காக ஜோபியைப் பார்த்தேன்; ரூபாயில்லை. ரூபாயை ரூமில் கீழே வைத்துவிட்டு மறந்து விட்டமையால் பழையபடி ரூமுக்கு வந்து இப்போத்தான் எடுத்துக்கொண்டு திரும்பினேன். தாங்களும் வந் தீர்கள், மன்னிக்கவேண்டும்" என்றான் வாலிபன். "சரி, பரவா யில்லை? வாருங்கள் சீக்கிரம். சினேகிதனைத் தனியே யிருக்கும் படி சொல்லி விட்டு வந்தேன்" என "இதோ" என்று நடந்தான் வாலிபன்.

இருவருமாக நடந்து மேற்குமுக நோக்கி பர்லாங் இரண்டு சென்றதும், கட்டையன் "ரூபாய் எவ்வளவு கொண்டுவந்தீர்களா?

என்றான். "ஐந்துரூபாய்நோட்டென்றான்" வாலிபன். "இவ்வளவு தான் கையிலிருந்ததோ" வென்று கட்டையன்கேட்க, வாலிபன் "இல்லை, வேண்டியரூபாயிருக்கிறது. இந்தஐந்துரூபாய் போதாதா வென்ன?" கட்டையன், "உம்! இனி யென்ன செய்கிறது. வந்தாயிற்று இவ்வளவு தூரம்; ஒரு இருபது ரூபாயாவது எடுத்துவருவீர்களென்று பார்த்தேன்" என்று வேகமாக நடந்தான். அந்தக் கட்டையனோடு வாலிபனுக்கு நடக்கமுடியவில்லை யாதலால், கட்டையன் வாலிபனை நோக்கி, மிஸ்டர் ஏன் வாக பண்ண முடியவில்லையா, ஒரு ரிக்ஷாபேசட்டுமா" என, வாலிபன் "பேசுங்கள் பணம்போனாற்போகிறது" என்றுசொல்ல, கட்டையன் தங்கள் எதிரில் கொஞ்சதூரத்திலிருந்த ஒரு ரிக்ஷாவைக் கூப்பிட்டுப் பேசினான். அவன் "சுவாமி மதராஸ் கிளப்புக்குப் போக நாலணாக்கொடுக்கணுங்க" என, கட்டையன் "ஆல்ரையிட் ஓடியா" என்றான். ரிக்ஷாக்காரன் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு வந்துநிறுத்தினான். உடனே இருவரும் அதில் ஏறிக்கொண்டு "அடே! கண்ணைமூடித்திறப்பதற்குள் போகவேண்டும். சீக்கிரம் போனால்இன்னொரு அணா அதிகமாகத் தருகிறேன். போ பார்க்கலாம்."என்றான் கட்டையன். ரிக்ஷாக்காரன்; "சுவாமி! அப்படியே" என்று ஓடினான்.

பத்து நிமிஷத்திற்கெல்லாம் ரிக்ஷா மதராஸ் கிளப்பிற்கருகே வந்தது. கட்டையன் நிறுத்தும்படிசொல்லி இறங்கினான். வாலிபனு மிறங்கி "ஸார் நோட்டாக விருக்கிறதே, இவனுக்கு அணாக் கொடுக்கவேண்டுமே" யென, கட்டையன் "நான் தருகிறேன்" என்று அணா ஐந்தையுங் கொடுத்து ரிக்ஷாக்காரனை அனுப்பிவிட்டான். மதராஸ் கிளப்புக்குச் சமீபமான இந்தஇடத்திற்கருகே இவர்கள் இறங்கின இடத்தில் வீடுகளெதுவுங் கிடையாது. அது நுங்கம்பாக்கம் என்னும் ஊருக்குச்செல்லும் பாதை. இதன் இருமருங்கும் மரங்களடர்ந்திருக்கும். பகலில் சூரியனுடைய கிரணமுமுட்புகாது. இரவில் சந்திரகிரணமும் உட்செல்லாது. ஜனப்புழக்கமும் அதிகமாயிராது. இந்த இடத்தில் இவர்

கள் இறங்கியதும் ரிக்ஷாக்காரனுக்குச் சந்தேகமுண்டாய் "இவர்களிங்கிறங்கக் காரணமென்ன, இவர்கள் யார்" என நினைத்து கொஞ்சதூரம் போவதுபோல் போய் ஒரு மரத்தடியில் ரிக்ஷாவை நிறுத்திவிட்டு இவர்களைக் கவனித்தான். இவர்களிருவரும் கொஞ்சதூரம் நடந்து ஓர் மரத்தண்டை போய் நின்றார்கள்.

கட்டையன்வாலிபனைநோக்கி, "இங்கேஉட்காருங்கள்; வந்துவிட்டேன் நொடியிலே" என்று தெற்குமுகமாகச் சென்றான். அவன் சென்ற ஒரு ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் ரிக்ஷாக்காரன் வாலிபனிடம் வந்து பட்டென்றுஓர்அரைகொடுத்து "நோட்டையெடடா பாப்பான். எடு சீக்கிரம்" என்று சொல்லி அவன் ஜேபியில் கைபோட்டு ஐந்து ரூபாய் நோட்டை யெடுத்துக் கொண்டு கம்பி நீட்டிவிட்டான். வாலிபன் தன் கன்னத்தில் அரை விழுந்ததும் ஒரு பெருங்குரலிட்டான். அந்தக் குரல் கேட்டதும் கட்டையன் ஓடி வந்தான். அவன் வருவதற்குள் ரிக்ஷாக்காரன் தயாராய்விட்டானதலால், அவன் போய்விட்டான். கட்டையன் வந்ததும் "என்ன ஸார்! என்ன, ஏன் கூவினீர்கள்?" என, வாலிபன் "ஸார் இதோ கொண்டுபோகிறான் என் ரூபாயை ஒருபயல்!" என்று கூறிக்கட்டையன் தன்னைப் பிரிந்தது முதல் நடந்ததைக் கூறித் தேகம்பதற நின்றான், கட்டையன், பரபரப்புற்று, எங்கே போகிறான் பாவி! அடித்தானா தங்களை! எங்கே அவன் என்று சுற்று மற்றும் பார்த்துச் சற்றுநேரம் கீழும் மேலுமாக விழித்துவிட்டு "நாம் வந்தவேளை யப்படி, வருந்த வேண்டாம், ரூபாய் போனால் போகிறது. நான் தருகிறேன். வாருங்கள்" என்று வாலிபனைக் கொஞ்சதூரம் தெற்குமுகமாக அழைத்துச்சென்று அங்கு நின்றான். அங்கே ஓர் மரத்தினடியில் ஓர் மாதிருந்தனள். அவளுக்குவயது பதினெட்டுக்குக் குறையாமலும் இருபதுக்கு மேற்படாமலு மிருக்குமென்று கணக்கிட்டுக்கொண்டான் தனக்குள் வாலிபன். தான் ரூபாய் பறிகொடுத்ததை மறந்தான், ஆனால் அச்சமயம் கையில் ஏதும் ரூபாயில்

லாமற் போனதற்கு வருத்தமுற்ருன். வருத்த மொருபக்க மிருப்பினும் அவன் மனம் அவளோடு பேசுவதில் ஆவல் கொண்டமையால் அந்த வருத்தத்தைப் பொருட்படுத்தாது கட்டையனை நோக்கிய வண்ணமாக நின்று "இந்த இருட்டில் ஒண்டியாயிருக்க எப்படித் தைரியம்" என, கட்டையன், எண்ணமுழுதும் தங்கள் வரவை எதிர்நோக்கியிருந்தமையால், மனதில் அச்சமெதுவும் தோன்றக் காரணமில்லை" என்ருன். வாலிபன் "எப்படியிருந்தாலும் இப்படிப்பட்ட சமயத்தில் ஸ்திரீகளுக்கு வெகு தைரியம்! பேய்க்கும் பயப்படார்கள் அவர்கள்" என்ருன்.

மாது (ஒருபக்கம் திரும்பியவண்ணத்தில்) "ஐயோ! இப்படிப்பட்ட சமயத்தில் ஸ்திரீகள் புருஷர்களாகவும் புருஷர்கள் ஸ்திரீகளாகவும் மாறிவிடுவார்கள் போலிருக்கிறது!" என்ருள்.

வரும்

ஏ - எஸ். பாரதி.

வர்த்தமானம்.

மனைவியை மாற்றிக்கொண்ட நண்பர்கள்:— அமேரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்துக் கோர்ட்டில் ஸ்பீடிக் என்பவர் தமது மனைவியை வேண்டாமென்று விலக்கிவிட்டார். பிறகு அவரது சிநேகிதருள் ஒருவரான கிரிபின் என்பவரும் மேற்படி கோர்ட்டில் தமது மனைவியை வேண்டா மென்று விலக்கி விட்டார். அப்பால் ஸ்பீடிக்கின் மனைவி கிரிபினையும், கிரிபின் மனைவி ஸ்பீடிக்கினையும் விவாகஞ் செய்து கொண்டனர். மனைவியரை மாற்றிக்கொண்ட நண்பரிருவரின் நட்பு எவ்வாறு நிலை பெறுமோ?

குழந்தையைக் காப்பாற்றிய நாய்:— லண்டன் நகரத்தில் குழந்தை யொன்று வண்டி வருவதை யறியாது நின்று வண்டியி

லகப்பட விருக்குஞ் சமயத்தில், அதை நாயொன்று கண்டு விரைந்தோடிப் போய், அக்குழந்தையைச் சற்று தூரத்தி விழுத்து விட்டுக் காப்பாற்றியது. கருணையென்பது பொதுவான தருமமா மென்பதிதனல் நன்கு விளங்கும்.

ஓரற்புத யந்திரம்:—சுவிட் சர்லாந்து தேசத்திலொரு சாஸ்திரி புதுவதாக ஒரு மின்சார யந்திரங் கண்டுபிடித் திருக்கின்றார். அதன்வாயிலாக விதைகள் விரைவாக முளைத்து மிகுந்த பயனைத் தருகின்றனவாம்; சிறிது கெட்டுப்போன விதைகளும் முளைத்துப் பயன் தருகின்றனவாம்.

விருத்தியில்லாத வீடு:—ருஷிய சக்ரவர்த்தியார் தமது பிரதான மந்திரியை ஸெயின்ட்பீட்டர்ஸ் பார்க்கிலுள்ள அரண்மனையொன்றில் வசிக்குமாறு கூறினர். அதற்கவர் அவ்வரண்மனை விருத்தியில்லாததென்றுகூறி, அதில் வசிப்பதைப்பற்றி மறுத்துவிட்டனர். அவ்வரண்மனையில் வசித்தவருள் ஜனரல் மெஸன்ஹாப் கலகக்காரரால் குத்தப்பட்டிறந்தார்; ஜனரல்போடஸாவ் பயித்தியம் பிடித்துப் போனர்; மந்திரிகளிருவர் கொல்லப்பட்டாரென்று முறையே அதற்குக் காரணங் கூறினர்.

240-ரூபாய் மதிப்புள்ள ஒரு வேளைப் போஜனம்:—அமேரிக்காவி லொருவர் தமது நண்பர்கட்கு ஒரு ஓட்டலில் ஒரு வேளை விருந்து செய்வித்து ஆளொன்றிற்கு 240-ரூபாய் வீதமாக அவ்வோட்டல்காரனுக்கு மொத்தமான தொகையைக் கொடுத்தார். இப்போஜனம் தேவாமிர்தமயமா யிருக்கும் போலும்.

ஜப்பானிலுள்ள புத்தாலயங்களும் புத்த குருக்களும்:—ஜப்பான் தேசத்தில் தற்போதுள்ள புத்தாலயங்களின் தொகை 71927; புத்த குருக்களின் தொகை 5126, புத்தமதத்திற்குச் சிறிது வேறுபட்ட ஷன்ஷூ என்பவர்களின் ஆலயத் தொகை 108722, குருக்களின் தொகை 1724.

பெண் போலீஸ்:—பெர்லின் பட்டணத்திலிப்போது 30—பெண்கள்வீடு சோதனைகளி னிமித்தம் போலீஸ் சேவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

நமது சக்ரவர்த்தினி யவர்களின் நன் கொடை:—நமது சக்ரவர்த்தினியார் மகாராணி மேரியவர்கள் லண்டனில் மகுடாபிஷேகம் நடைபெற்றபோது மேரியென்று பேருள்ள மாதர்களெல்லா மொருங்கு கூடித் தமக்குச் சமர்ப்பித்த காணிக்கைப் பொருள்களை, லண்டனில் கூலி வேலை செய்யும் கூலிப் பெண்களுக்காக ஒரு விடுமுறை (லீவ்) வீடு கட்டுவதிலுபயோகப் படுத்தத் தீர்மானித் திருக்கின்றனர்.

கங்கைக்குப் பாலம்.

கீழ்கங்கைப் பாலத்தின் (Lower Ganges Bridge) வேலை இரண்டாம் தரம் தொடங்கியிருக்கிறது. இதற்குமுன் இப்பாலத்தின் வேலை சிறிது நடந்திருக்கிறது. இப்பாலம் 5387 அடி நீளமுள்ளதாயிருக்கும். 5280 அடி கொண்டது ஒரு மைல் என்று நமது நேயர்களுக்குத் தெரியுமாதலால் இப்பாலத்தின் நீளம் 1-மைலுக்கு மேல் என்று நாம் கூறவேண்டுவதில்லை. இதன் மேலோ இரட்டை லயனுள்ள ரெயில்வே போடப்படும். இந்த ரயில்பாதை கல்கத்தாவுக்கும் வட. வங்காளத்திற்கும் நேரடியான வழியாயிருக்கும்; இப்பாலத்தின் வேலையால், கங்கை நீர் தேங்கி, கரைகளை யுடைத்துப் போடு மாகையால், அவ்வாறு நடவாதிருக்கும்படி 4000 அடி தூரத்திற்கு இருபுறமும் அணை கட்டி வருகிறார்கள். சென்ற வருஷம் 20,000 ஆட்கள் வேலை செய்தனர். இந்த வருஷமும் இவ்வளவு பேர் வேலை செய்வார்கள். இந்த அணையைத் தவிர வேறு ஓரணையும் போடவேண்டுமாம். அவ்வணை 5-மைலுக்குமேல் இருக்குமாம். இவ்விரண்டணைகளுக்குமாக 13,65,137 டன் பாறைக் கற்கள் வேண்டுமெனப் படுகிறது.

வைத்திய சாஸ்திரம் கற்கும் பெண்கள்— சென்னைக் கவர்ன்மேண்டாரின் உபகாரச் சம்பளம்.

அடியில் கண்ட உத்தரவை சென்னைக் கவர்ன்மெண்டார் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்:—

வைத்திய சாஸ்திரத்தைக் கற்று, சென்னை வைத்திய கலா சாலையின் M. B. C. M. பட்டங்களைப் பெற விரும்பும் ஸ்திரீ களுள் மூவருக்கு மாதம் ஒன்றுக்கு 25 ரூபாய் வீதம் சம்பளம் கொடுத்து வருவதாக கவர்னர் ஆலோசனைச் சபையில் தீர்மா னிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் டப்ரின் பண்டைச் சேர்ந்த ப்ரொவின்ஷியல் கமிட்டியாரால் இந்த சம்பளம்கொடுக் கப்படும். இண்டர் மீடியேட் பரீக்ஷையில் தேர்ந்தவர்களுக்காவது அல்லது அந்தப் பரீக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருப்பவர்களுக் காவது சம்பளம் கொடுக்கப்படும். இவ்விதம் சம்பளம் ஏழு வரு ஷம் வரையிலும் கொடுக்கப் படும்.

இவ்விதம் உயர்தரப் படிப்பில் ஆசை உண்டாகும்படி அவர் களைச் செய்வதற்கு வழி உயர்தரப் படிப்பில் தேர்ந்தவர்களுக்கு இதனடியிற் கண்ட ரேட்டு வீதம் சம்பளம் கொடுக்கப்படுவதே என்று கவர்னர் அபிப்பிராயப் படுகிறார்.

	சம்பளம்	அலவன்ஸ்
முதல் இரண்டு வருஷங்களில்	100	,,
3 முதல் 7 வரை	100	25
8 முதல் 14 வரையில்	125	50
15 முதல் 21 வரை	150	50
22 முதல் 28 வரை	175	50
29 முதற் 35 வரை	200	50

டப்ரின பண்டின் கமிட்டியாருக்கு, இவ்வளவு செலவு செய்வதற்குச் சக்தியற்றுப் போனால், வருஷம் ஒன்றுக்கு 12000 ரூபாய் அக்கமிட்டிக்கு கொடுத்துதவும்படியாய் கவர்னர் ஆலோசனைச் சபையில் உத்தரவு அளித்திருக்கின்றனர்.

8000-பேர் உட்காரத் தகுந்ததாக 210-அடி நீளமும் 160-அடி அகலமும் உடையதான பந்தல் காங்கிருஸுக்காக கல்கத்தாவில் போடப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் ஜில்லாவில் ஆண் பிள்ளைகளுக்காக 8 எலிமெண்டரி ஸ்கூல்களும் பெண் பிள்ளைகளுக்கு 4 எலிமெண்டரி ஸ்கூல்களும் ஸ்தாபிக்கப்பட கவர்ன்மெண்டார் ரூ 1886-சாங்ஷன் செய்திருக்கிறார்கள்.

புத்தகவரவு.

புத்திமானேபலவான்.

இப்பெயர்புனைந்த தமிழ் நாவல் ஒன்று திருவல்லிக்கேணி எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனியாரால் நமது பார்வைக் கனுப்பப்பெற்றோம். இப்புத்தகம் ஏனையதமிழ் நாவல்களைப் போல் கேவலம் ஸ்திரீபுருஷர்களின் வர்ணனைகளும் காதல்சம்பந்தமான வார்த்தைகளும் நிறம்பப் பெறாமல் நம் தேய சிறுவர் சிறுமியர்களுக்குச் சகோதரத்வம், பெரியோரிடத்து வணக்கம், நற்குண நற்செய்கைகளைப் போதிக்கக் கூடியதாயும், அகங்காரம், டம்பம், அவா முதலியவைகளை யொழிக்கக்கூடியதாயும்இருக்கிறது. இதனை வாங்கிப் படித்தல் நன்மை பயக்குமென்றே சொல்வோம்.

விலை அணா 0 6 0

வர்ணாச்சிரம தர்மம்.

இப்பெயரினையுடைய புத்தகம் ஒன்று இதனை இயற்றியவராகிய மதுரைக்காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ எம்-என். சுப்பிரமணியசாஸ்திரியாரவர்களால் நமதுபார்வைக்கனுப்

பப் பெற்றோம். இதில் ஜாதி பேதங்களின் வகையும் அதனுள் பிராமனரின் மேன்மையும் அவர்களுடைய மேன்மையைப் பழிப்பவர்களுக்குத் தக்க சமாதானங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் படித்தல் மிகவும் அவசிய மாகும்

விலை அணா 0 6 0

பத்திரிகை வரவு.

பூர்ண சந்திரோதயம்.

இப்பத்திரிகையின் அக்டோபர், நவம்பர் இரண்டு மாதச் சஞ்சிகைகளும் கிடைத்திருக்கின்றன. இதில் மகா அருமையான விஷயங்கள் பிரம்ஹஸ்ரீ ப. நாராயணய்யர் பி எ, பி எல், எப் டி எஸ் அவர்களாலும், அ. ரங்கஸ்வாமி ஐயர் பி ஏ. பி எல். எப் டி எஸ் அவர்களாலும் எழுதப்பட்டு வருகின்றன. நவம்பர் மாதத்திய தில் வெளிவந்துள்ளமோக்ஷம் அல்லது வீடு என்னும் விஷயம், எல்லாராலும் கொண்டாடத் தக்கதாகும்.

பிழைக்கும் வழி.

இப்பத்திரிகையின் அக்டோபர் மாதத்தியது கிடைக்கப் பெற்றோம். இதில் கௌன்ஸில் மெம்பர் வி. கிருஷ்ணசாமி, ஐயர் அவர்கள் போடோவுடன் அவர் மதராஸ் ஸம்ஸ்கிருதகாலேஜின் அபிவிருத்திக்காக உதவிபுரிந்ததையும் விளக்கியுள்ளது. அன்றியும் விவசாயம், வியாபாரம் முதலியவைகளின் குறிப்பும் வழக்கம்போல் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பு:—டெல்லியில் நடக்கப் போகும் நமது சக்ரவர்த்தினியவர்களின் மகுடாபிஷேக வைபவங்களுக்காக நடந்த ஏற்பாடுகளையும் அது நடைபெறும் விமரிசையையும் விளக்கி நவம்பர் டிசம்பர் மாதத்திய சஞ்சிகைகள் ஒன்றுப் பிரசுரிக்கப்படும்.

REGISTERED
MADRAS.

DELHI DURBAR 12th December 1911

மாக்ஷிமைதங்கிய நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும்.

MADRAS: THE GUARDIAN PRESS, MOUNT ROAD